




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 224 06.2.2026 FRIDAY THAI : 23 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 224 06.2.2026 வெள்ளிக்கிழமை தை : 23 விலை : ரூ.5/–


## வரி பாக்கியை செலுத்தாவிட்டால்

# “ஜெயலலிதா சொத்துகள் ஏலம் விடப்படும்!”

## வருமான வரித் துறை

சென்னை: பிப்.6-

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் செல்வ வரி பாக்கி, வட்டியுடன் சேர்த்து, ரூ.20 கோடி செலுத்த வேண்டியுள்ளதாகவும், வரி பாக்கியை செலுத்தாவிட்டால் முடக்கம் செய்யப்பட்ட சொத்துகளை ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிரான வருமான வரி பாக்கி, 13 கோடி ரூபாயை செலுத்தக் கூறி, அவரது சட்டப்பூர்வ வாரிசாக அறிவிக்கப்பட்டுள்ள தீபாவுக்கு, வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியது. இந்த நோட்டீஸை எதிர்த்து, தீபா தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மற்றொரு வாரிசான தீபக்கும் வழக்கில் சேர்க்கப்பட்டார்.



இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, தீபா தரப்பில், வருமான வரி பாக்கி முதலில் 36 கோடி ரூபாய் என்றும், பின்னர் 13 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என்றும் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. சரியான தொகையை தெரிவித்தால், செலுத்த தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து வரி பாக்கி குறித்து பதில் மனு தாக்கல் செய்ய வருமான வரித்துறைக்கு உத்தரவிட்ட உயர் நீதிமன்றம், அதுவரை வரி பாக்கி வசூல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும்படியும் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், வருமான வரித்துறை சார்பில், ஜெயலலிதா செலுத்த வேண்டிய வரி பாக்கி குறித்து பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 2026 ஜனவரி 31ம் தேதி வரையிலான காலகட்டத்துக்கு வருமான வரி பாக்கி, வட்டியுடன் சேர்த்து 9 கோடியே 17 ஆயிரத்து 962 ரூபாயும், செல்வ வரி பாக்கி 11 கோடியே 8 லட்சத்து 8 ஆயிரத்து 730 ரூபாயும் செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் வாரிசாக அறிவிக்கப்பட்டுள்ள தீபக் 6 கோடியே 75 லட்சத்து 32 ஆயிரத்து 342 ரூபாயை ஆறு தவணைகளாக செலுத்துவதாகக் கூறி, ஒரு கோடியே 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயை செலுத்தியுள்ளதாகவும் வருமான வரித் துறை பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது.

வரி பாக்கிக்காக, ஜெயலலிதா உயிருடன் இருந்தபோதே சில சொத்துகள் முடக்கப்பட்டன. வரி பாக்கியை செலுத்தாவிட்டால், முடக்கப்பட்ட சொத்துகளை ஏலம் விட சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பதில் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு, பிப்ரவரி 18ஆம் தேதி மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளது.

## “வளர்ந்த இந்தியாவை நோக்கி நாடு வேகமாக பயணிக்கிறது”

## மாநிலங்களவையில் பிரதமர் மோடி பேச்சு

புதுடெல்லி: பிப்.6-

இந்தியா பிரகாசமான எதிர்காலத்தைக் கொண்டிருக்கிறது என்றும், வளர்ந்த இந்தியாவை நோக்கி நாடு வேகமாக பயணிக்கிறது என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் கூட்டத் தொடரை முன்னிட்டு கடந்த ஜனவரி 28ம் தேதி, நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரை நிகழ்த்தினார். அவரது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மக்களவையில் பிரதமர் மோடி உரை நிகழ்த்துவதை தவிர்த்துவிட்டார். இதையடுத்து, பிரதமர் மோடியின் பதில் உரை இல்லாமல் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மக்களவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், இன்று மாநிலங்களவையில் நடத்தப்பட்ட விவாதத்தில் பங்கேற்று பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர் பேசியது: “குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தனது உரையில், நடுத்தர வர்க்கம், கீழ் நடுத்தர வர்க்கம், ஏழைகள், கிராமங்கள், விவசாயிகள், பெண்கள், அறிவியல், தொழில்நுட்பம், விவசாயம் உள்ளிட்ட அனைத்து விஷயங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்துள்ளார். மேலும், இந்தியாவின் முன்னேற்றத்துக்கான ஒருங்கிணைந்த குரலை நாடாளுமன்றத்தில் எதிரொலித்துள்ளார்.

நாட்டின் இளைஞர்கள் இந்தியாவின் திறனை எவ்வாறு முன்னேற்றுகிறார்கள் என்பதை அவர் விரிவாக விவாதித்துள்ளார். ஒவ்வொரு பிரிவின் திறனையும் அவர் எடுத்துரைத்துள்ளார். இந்தியாவின் பிரகாசமான எதிர்காலத்தின் மீது அவர் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார். இது நம் அனைவருக்கும் ஊக்கமளிக்கிறது.

21ஆம் நூற்றாண்டின் முதல் காலாண்டு முடிந்துவிட்டது, ஆனால் இந்த இரண்டாவது காலாண்டு கடந்த நூற்றாண்டில் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் இரண்டாவது காலாண்டைப் போலவே தீர்க்கமானது. இந்த இரண்டாவது காலாண்டும் அதே அளவுக்கு சக்திவாய்ந்ததாகவும், வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதை நோக்கி அதே வேகத்தில் முன்னேறும் என்பதையும் நான் தெளிவாகக் காண்கிறேன்.

இன்று, நாட்டின் ஒவ்வொரு நபரும் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளதாக உணர்கிறார்கள். இப்போது நாம் நிறுத்தவோ அல்லது திரும்பிப் பார்க்கவோ கூடாது. நாம் வேகமாக முன்னேறி, நமது இலக்குகளை அடைந்தாக வேண்டும். நாம் அந்த திசையில் நகர்கிறோம்.

உலகின் முக்கியப் பொருளாதாரங்களில், இந்தியா இன்று குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சியைப் பெற்று வருகிறது. விரைவான வளர்ச்சியும் குறைவான பணவீக்கமும் கொண்ட இந்த அரிய கலவையானது, நமது பொருளாதாரத்தின் வலிமைக்கும் மீள்தன்மைக்கும் ஒரு சான்றாகும்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இந்தியா ‘பலவீனமான ஐந்து’ பொருளாதார நாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. சுதந்திரம் பெற்ற நேரத்தில், நாம் உலகின் 6வது பெரிய பொருளாதாரமாக இருந்தோம். இருப்பினும், இடைப்பட்ட ஆண்டுகளில் ஏற்பட்ட தவறான நிர்வாகம் காரணமாக, நமது தரம் 11வது இடத்துக்குச் சரிந்தது. இப்போது, நாம் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறுவதற்கான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.



மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், உலகின் மிகவும் வளமான நாடுகள் கூட வயதாகி வருகின்றன. அவற்றின் மக்கள் தொகை நாம் முதியவர்கள் என்று அறியும் வயதை எட்டியுள்ளது. நமது நாடு வளர்ச்சியின் புதிய உயரங்களை எட்டுகிறது. அதே நேரத்தில், நமது நாடு நாளுக்கு நாள் இளமையாகி வருகிறது. இது இளம் மக்கள்தொகை கொண்ட நாடு.

இன்று, உலகம் ஒரு புதிய உலக ஒழுங்கை நோக்கி வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. தற்போதைய சூழ்நிலைகளையும் நிலவரங்களையும் அரசியல் சார்பின்றி நாம் பகுப்பாய்வு செய்யும்போது, இந்தியாவின் மீது நாட்டம் அதிகரித்து வருவதை தெளிவாகக் காண முடிகிறது. உலகின் நண்பனாகவும், உறவினனாகவும் திகழ்வதோடு, இன்று இந்தியா பல நாடுகளுக்கு ஒரு நம்பகமான பங்காளியாக உருவெடுத்துள்ளது.

இந்தியா மீதான உலகத்தின் ஈர்ப்பு அதிகரித்து வருவதால், இந்தியாவின் திறமையின் முக்கியத்துவத்தையும் அது அங்கீகரித்து வருகிறது. கனவுகள், உறுதி, வலிமை ஆகியவற்றைக் கொண்ட உலகின் மிக முக்கியமான இளம் திறமையாளர்களை நாம் கொண்டுள்ளோம். சக்தியின் ஆசிர்வாதம் நம்முடன் உள்ளது. இன்று உலகில் உருவாகி வரும் சவால்களுக்கு தீர்வுகளை வழங்கும் நாடாக இந்தியா உள்ளது.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகளுடன் இந்தியா வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறது. சமீபத்தில் நாங்கள் ஒன்பது ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளோம். இவற்றில், ‘அனைத்து ஒப்பந்தங்களுக்கும் தாய்’ என்று அடிக்கடி குறிப்பிடப்படும் மிக முக்கியமான ஒப்பந்தமான, ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 உறுப்பு நாடுகளுடனான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகின் முக்கிய பொருளாதாரங்களில் இந்தியாவின் வளர்ச்சி இன்று மிக அதிகமாக உள்ளது. இந்தியா சுதந்திரம் பெற்றபோது, நாம் உலகின் ஆறாவது பெரிய பொருளாதாரமாக இருந்தோம். ஆனால் இவர்கள் (எதிர்க்கட்சி வரிசையில் உள்ள காங்கிரஸை சுட்டிக்காட்டிப் பேசினார்) நமது பொருளாதாரத்தில் பெரும் அழிவை ஏற்படுத்தி, அதை 11வது இடத்திற்குத் தள்ளியுள்ளனர். இன்று, நாம் மூன்றாவது இடத்தில் உள்ள பொருளாதாரமாக மாறுவதை நோக்கி வேகமாக நகர்கிறோம். இன்று, இந்தியா அனைத்து துறைகளிலும் நம்பிக்கையான இந்தியாவாக உள்ளது.

‘சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றம்’ என்ற கொள்கையுடன் நாம் முன்னேறியுள்ளோம். நாடு இப்போது சீர்திருத்தப் பாதையில் வேகமாகப் பயணித்துக்கொண்டிருக்கிறது. எங்கள் முயற்சிகள் உற்பத்தித் துறையை வலுப்படுத்துவதிலும், நமது தொழில்முனைவோருக்கு ஆதரவளிப்பதிலும் கவனம் செலுத்தியுள்ளன. இந்தியா இப்போது உலக அரங்கில் போட்டியிடத் தயாராக உள்ளது என்று நான் நம்பிக்கையுடன் கூற முடியும்” என்று பிரதமர் மோடி பேசினார்.

## எடப்பாடி பழனிச்சாமியின் தேர்தல் வாக்குறுதிகளை தமிழக மக்கள் நம்பத் தயாராக இல்லை : அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, பிப்.6

திண்டுக்கல் மாவட்ட ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் தனது இல்லத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது பேசியதாவது. மத்தியில் ஆளும் பாஜக அரசு மும்மொழிக் கொள்கையை கடை பிடித்தால்தான் கல்விக்கு நிதி உதவி தருவேன் என முரண்டு பிடிக்கிறது. அதனுடன் கூட்டணி வைத்துள்ள எடப்பாடி பழனிச்சாமி



வழக்குகளுக்காக பயந்து அதிமுக என்ற இயக்கத்தை அடமானம் வைத்துவிட்டார். அவர் வெளியிட்ட தேர்தல் வாக்குறுதிகளை தமிழக மக்கள் நம்பத் தயாராக இல்லை. 2011 முதல் 2021 வரை பத்து வருடங்களாக தமிழகத்தில் ஆட்சி செய்த அதிமுக அரசு 10 லட்சம் முதியோருக்கு திமுக ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையை நிறுத்தியது. ஒரு நிமிடம் முதியோர்களின் வாழ்வாதரத்தைப் பற்றி கவலைப்படாமல் நிவாரண நிதியை நிறுத்திய அதிமுக அரசுதான் இன்று தேர்தல் வாக்குறுதிகளை அள்ளிவிடுகிறது. 10 வருடம் தமிழக முதியோர்களையும், நான்கரை வருடம் தமிழக மக்களின் வாழ்வாரத்தைப் பற்றி கவலைப்படாத எடப்பாடி பழனிச்சாமியின் பேச்சு தமிழக மக்கள் மத்தியில் எடுபடாது என்றார்.

கிராமப்புற மாணவர்கள் உயர் கல்விக்கு சிரமப்பட்டு வந்த நிலை மாறி அவர்கள் வீட்டருகே கல்லூரிகளை கொண்டுவந்தது திமுக அரசு. 57 கல்லூரிகள் புதிதாக தொடங்கப்பட்டு மாபெரும் சாதனை படைத்தது திராவிட மாடல் ஆட்;சி நாயகன் கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திமுக அரசு என்றார். பல மாநிலங்கள் இணைந்ததுதான் ஒன்றியம். ஒன்றிய அரசு (பாஜக அரசு) மாநிலங்களில் இருந்து வரியை வாங்கிக் கொண்டு மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய நிதியை தராமல் இழுத்தடித்து வருகிறது. கூட்டணியை பற்றி முடிவு செய்வதும், அவர்களுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளை முடிவு செய்வதும் கழகத் தலைவர்தான் என்றார்.

## “பிரதமரை தாக்க திட்டமிட்டதாக சபாநாயகர் ஓம் பிர்லா சொல்வது பொய்” : பிரியங்கா காந்தி

புதுடெல்லி: பிப்.6-

நாடாளுமன்ற மக்களவையில் பிரதமருக்கு எதிராக அசம்பாவித சம்பவங்களை நிகழ்த்த எதிர்க்கட்சி எம்பிக்கள் திட்டமிட்டதாக சபாநாயகர் ஓம் பிர்லா கூறி இருப்பது முழுக்க முழுக்க பொய் என்று காங்கிரஸ் எம்பி பிரியங்கா காந்தி வத்ரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்பாராத செயலில் ஈடுபடக்கூடும் என்ற தகவல் கிடைத்ததால் அவைக்கு வர வேண்டாம் என பிரதமரை



கேட்டுக்கொண்டதாக ஓம் பிர்லா கூறி இருப்பது குறித்து செய்தியாளர்கள் பிரியங்கா காந்தி வத்ராவிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த அவர், ‘‘இது முழுக்க முழுக்க பொய். பிரதமர் மீது கை வைப்பது அல்லது தாக்குவது என்ற கேள்விக்கே இடமில்லை. அப்படி ஒரு திட்டம் இருந்தது என்று யாராவது சொன்னால் அது முற்றிலும் தவறு.


மூன்று பெண் எம்பிக்கள் பிரதமர் இருக்கைக்கு முன் நின்றார்கள். அதனால் என்ன? பிரதமர், சபாநாயகருக்குப் பின்னால் ஒளிந்து கொள்கிறார். அவருக்கு அவைக்கு வர துணிச்சல் இல்லை’’ என குற்றம் சாட்டினார்.

முன்னதாக இந்த விவகாரம் குறித்துப் பேசிய சபாநாயகர் ஓம் பிர்லா, ‘‘மக்களவையில் சில எம்பிக்கள் முறையற்ற முறையில் நடந்து கொண்டனர். குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரை நிகழ்த்த பிரதமர் மோடி மக்களவைக்கு வருவதாக இருந்தார். அவர் வருவதற்கு முன்பாக, காங்கிரஸ் பெண் எம்பிக்கள் பிரதமர் இருக்கையைச் சுற்றி வளைத்திருந்தனர்.

பிரதமரின் உரையின்போது, காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சி எம்பிக்கள் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்யலாம் என்று எனக்கு முன்கூட்டியே தகவல் கிடைத்தது. அரசியல் கருத்து வேறுபாடுகள் நாடாளுமன்ற அவைக்குள் கொண்டு வரப்பட்டதில்லை. ஆனால், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில எம்பிக்கள், பிரதமரின் இருக்கைக்குச் சென்று எதிர்பாராத ஒரு சம்பவத்தை நிகழ்த்தக்கூடும் என எனக்கு நம்பகமான தகவல் கிடைத்தது.

அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் அது தேசத்தின் கண்ணியத்துக்கு கடும் சேதத்தை ஏற்படுத்தி இருக்கும். அதனால்தான், நடாளுமன்றத்துக்கு வர வேண்டாம் என பிரதமரை நான் கேட்டுக்கொண்டேன். நேற்று நடந்தது நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு கரும்புள்ளி’’ என ஓம் பிர்லா தெரிவித்தார்.

# இளையோருக்கு மனநலக் கட்டமைப்பு வலுப்பட வேண்டும்!



சிவகாசி, பிப்.6-

எந்தவொரு பிரச்சினைக்கும் தன்னைத்தானே தண்டித்துக்கொள்வது ஒரு தீர்வல்ல. காலம்காலமாக ஒலித்துவரும் இந்தக் குரலை மீண்டும் ஒரு முறை எழுப்ப வைத்திருக்கிறது சிவகாசியில் அண்மையில் நிகழ்ந்த ஒரு கல்லூரி மாணவியின் தற்கொலை. இளையோர் மத்தியில் மனநலக் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தைச் சமூகத்துக்கு இது உணர்த்தியிருக்கிறது.

சிவகாசியைச் சேர்ந்த ஒரு கல்லூரி மாணவி தனது நண்பருடன் இருக்கிற ஒளிப்படத்தைச் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. அந்தத் தகவல் சிலரால் பகிர்ந்துகொள்ளப்பட்டு அலுவலக உதவியாளர் மூலம் கல்லூரி முதல்வரின் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

அதன் தொடர்ச்சியாக அந்த மாணவியின் தாய் வரவழைக்கப்பட, தாயின் முன்னிலையில் அப்பெண்ணைக் கல்லூரித் தரப்பு கண்டித்ததாகக் கூறப்படுகிறது. அதன் பின்னர் வீடு திரும்பியவுடன் அப்பெண் தனது உயிரை மாய்த்துக்கொண்டிருக்கிறார். இதைக் கண்டித்து மாணவர் அமைப்புகள் போராட்டம் நடத்திய நிலையில், கல்லூரி முதல்வரும் சம்பந்தப்பட்ட பணியாளரும் கைதுசெய்யப்பட்டனர்.

# டாஸ்மாக் பணியாளர்கள் கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தி பிப்.11ல் அதிமுக பேரணி



சென்னை, பிப்.6-

டாஸ்மாக் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைளை நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டு வைத்திருக்கும் திமுக ஸ்டாலின் மாடல் அரசையும், பணியாளர்கள் நலன் கருதி அவர்களது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், பிப்.11ல் அண்ணா தொழிற்சங்கப் பேரவை சார்பில் பேரணி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்: "திராவகத் திறனற்ற முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான விடியா திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு; மக்களின் அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாதது; பெண்களுக்கு பாதுகாப்பின்மை; கொலை, கொள்ளை, வழிப்பறி என பல்வேறு அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்று வருவது தொடர்கதையாகி விட்டது. முதல்வர் ஸ்டாலின் இவை எதையும் கண்டுகொள்ளாமல் மெத்தனப் போக்கோடு இருந்து வருவது கண்டனத்திற்கு உரிய விஷயமாகும்.

அந்த வகையில், டாஸ்மாக் நிறுவனத்தில் தமிழகம் முழுவதும் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் ஊழியர்களின் முக்கிய கோரிக்கைகளான, பணி நிரந்தரம் செய்வது, போதுமான ஊழியர்கள் நியமனம் செய்யப்படாதது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டு வைத்திருக்கும் திமுக அரசையும், டாஸ்மாக் நிர்வாகத்தையும் கண்டித்தும்; பணியாளர்கள் நலன் கருதி அவர்களது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், அதிமுக அண்ணா தொழிற்சங்கப் பேரவையின் சார்பில் பிப்.11ம் தேதி (புதன் கிழமை) காலை 10 மணியளவில் பேரணி நடைபெறும்.

முன்னாள் அமைச்சர் தங்கமணி, தலைமையில், அண்ணா தொழிற்சங்கப் பேரவைச் செயலாளர் ஆர். கமலக்கண்ணன் முன்னிலையில், சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் இருந்து எழும்பூர் டாஸ்மாக் தலைமை அலுவலகம் வரை பேரணியாகச் சென்று கண்டனக் குரல் எழுப்பி, நிர்வாக அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்படும்.

மேலும், அண்ணா தொழிற்சங்கப் பேரவையின் சார்பில் நடைபெற உள்ள இந்தப் பேரணியில், டாஸ்மாக் அண்ணா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகளும், அண்ணா தொழிற்சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் பல்வேறு இணைப்புச் சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகளும், உறுப்பினர்களும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்." என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

# “திமுகவின் காட்டாட்சி விரட்டப்படும்” அஜித்குமார் விவகாரத்தில் நயினார் நாகேந்திரன் கருத்து



சென்னை, பிப்.6-

“சிவகங்கை வரை சென்ற முதல்வர் ஸ்டாலின், தமது ஏவல்துறையின் மூர்க்கத்தனத்தால் அடித்துக் கொல்லப்பட்ட அஜித்குமாரின் இல்லத்திற்குச் சென்று ஆறுதல் சொல்லாதது ஏன்?. ஏழை எளிய மக்களை பலிகொடுக்கும் திமுகவின் காட்டாட்சி விரட்டியடிக்கப்படும்” என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இரத்தம் தோய்ந்த கரங்களுடன் இந்தத் தேர்தலைச் சந்திக்கப் போகும் திமுக. கடந்த ஆண்டு ஜூன் மாதம் தமிழகத்தையே உலுக்கிய சிவகங்கை மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமாரின் மரணம், காவல் மரணம் எனவும், அஜித்குமார் மீது நிகிதா அளித்த புகாரில் உண்மையில்லை எனவும் சென்னை உயர் நீதிமன்ற அமர்வில் சிபிஐ இன்று அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

ஒன்றுமே இல்லாத வழக்கில் அப்பாவி ஒருவரைக் காவலர்கள் அநியாயமாக அடித்துக் கொலை செய்துவிட்டனர் என சிபிஐ தரப்பில் தெரிவித்துள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தமிழகத்தில் நடப்பது மனிதநேயமற்ற கொடுங்கோல் ஆட்சி என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

பாலியல் வன்கொடுமை குறித்து புகாரளிக்க வரும் பெண்களிடம் தனிப்பட்ட முறையில் துருவித் துருவி விசாரித்து அவர்களை தர்மசங்கடத்திற்கு ஆளாக்கும் திமுகவின் ஏவல்துறை, அஜித்குமார் மீதான புகாரை மட்டும் அதிரடி காட்டியதன் காரணம் என்ன?

புகாரின் பின்னணியையும் உண்மைத் தன்மையையும் முழுதாக ஆராயாமல் கையில் கிடைத்த அப்பாவியைக் கம்பால் அடித்தே கொலை செய்யுமளவிற்குக் காவலர்களின் இதயம் மரத்துப் போய்விட்டதா? மூளை மழுங்கிவிட்டதா? அல்லது மேலிடத்திலிருந்து அத்தனை அழுத்தம் கொடுக்கப்பட்டதா?

சிவகங்கை வரை சென்ற முதல்வர் ஸ்டாலின், தமது ஏவல்துறையின் மூர்க்கத்தனத்தால் அடித்துக் கொல்லப்பட்ட அஜித்குமாரின் இல்லத்திற்குச் சென்று ஆறுதல் சொல்லாதது ஏன்?

உள்ளிட்ட பல கேள்விகள் மக்கள் மனதை அரித்துக் கொண்டிருக்கின்றன. இவை அனைத்திற்குமான விடைகள் வரும் சட்டமன்றத் தேர்தலின் முடிவுகளில் கிடைக்கும். ஏழை எளிய மக்களை பலிகொடுக்கும் திமுகவின் காட்டாட்சி விரட்டியடிக்கப்படும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# லிபியா முன்னாள் அதிபர் கடாபியின் மகன் சுட்டுக் கொலை



திரிபோலி:, பிப்.6-

வட ஆப்பிரிக்க நாடான லிபியாவில் கடந்த 1969 ம் ஆண்டு முதல் மொம்மர் கடாபி ஆட்சி செய்து வந்தார். பல்வேறு அடக்குமுறைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த 2011ம் ஆண்டு உள்நாட்டுக் கலவரத்தில் ஈடுபட்டனர். அப்போது சர்வாதிகார அதிபர் கடாபி பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதன் மூலம் 40 ஆண்டுகளுக்குப் பிறகு லிபியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கடாபியின் 2வது மகன் சைப் அல் இஸ்லாம் கடாபி (53). இவர் லிபியாவின் ஜிண்டான் நகரில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வந்தார். கடாபிக்கு எதிராக மக்கள் கலவரத்தில் ஈடுபட்ட போது மனித குலத்துக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை செய்ததாக சைப் அல் இஸ்லாம் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதையடுத்து இவரை தேடப்படும் குற்றவாளியாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அறிவித்தது. இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை வீட்டின் தோட்டத்தில் சைப் அல் இஸ்லாம் இருந்தபோது, 4 மர்ம நபர்கள் திடீரென வீட்டுக்குள் புகுந்தனர். வீட்டில் இருந்த சிசிடிவி கேமராக்கள் அனைத்தையும் செயலிழக்க செய்தனர்.

பின்னர் சைப் அல் இஸ்லாம் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர். இதில் சைப் உயிரிழந்தார். இத்தகவலை சவுதியின் அல் அரேபியா தொலைக்காட்சி வெளியிட்டது. அவரை சுட்டுக் கொன்றவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை என்று வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தார்.

# மும்பை புனே நெடுஞ்சாலையில் லாரி கவிழ்ந்து விபத்து: 12 மணி நேரமாக காத்திருந்த வாகனங்கள்



## 12 மணி நேரமாக காத்திருந்த வாகனங்கள்

புனே, பிப்.6-

மகாராஷ்டிர மாநிலத் தலைநகர் மும்பையிலிருந்து 120 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புனே நகருக்கு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு உள்ளது. இந்த சாலையில் பயணிக்க வேண்டுமானால் சுங்கக் கட்டணம் செலுத்த வேண்டும்.

இந்நிலையில் மும்பை புனே நெடுஞ்சாலையில் ராய்காட் மாவட்டம் ஆதோஷி சுரங்கப்பாதை அருகே நேற்று முன்தினம் ஒரு காஸ் டேங்கர் லாரி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. லாரியில் புரோப்பிலீன் என்ற காஸ் அடைக்கப்பட்டு இருந்தது. இதனால் காஸ் கசியும் அபாயம் இருந்ததால் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதையடுத்து அந்த லாரியின் பின்னால் வந்த வாகனங்கள் வரிசையாக அணிவகுத்து நின்றன. சாலையில் இருந்த காஸ் டேங்கர் லாரியை அப்புறப்படுத்த நெடுஞ்சாலை ஊழியர்களும், தீயணைப்புப் படை வீரர்களும் பெரும் முயற்சி செய்தனர். ஆனால் அதை அகற்றுவதற்கு சிரமம் நீடித்தது. இந்த விபத்து மாலை 4.45 மணிக்கு ஏற்பட்டது.

மாலை 5 மணி முதல் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவுக்கு வாகனங்கள் நீண்ட வரிசையில் அணி வகுத்து நின்றன. விபத்து நடந்த இடம் வனப்பகுதியாகும். நள்ளிரவு வரை இந்த நிலை நீடித்தது. இதையடுத்து போக்குவரத்து போலீஸார், எதிரே வரும் வழியில் வாகனங்களை ஒருபக்கமாக செல்ல அனுமதித்தனர். இருந்தபோதும் போக்குவரத்து நெரிசல் குறையவில்லை.

இதனால் வாகன ஓட்டிகள் பெரும் அவதிக்குள்ளாயினர். தாங்கள் அளித்த சுங்கக் கட்டணத்தை தங்களுக்குத் திருப்பித் தர வேண்டும் என்று அவர்கள் சுங்கச்சாவடி அதிகாரிகளிடம் கோஷமிட்டனர். அப்பகுதியில் போதுமான குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட எந்தவித அடிப்படை வசதியும் இல்லாததால் வாகன ஓட்டிகள் அவதிப்பட்டனர்.

# இந்தியா இனி ரஷ்ய கச்சா எண்ணெயை வாங்காது: வெள்ளை மாளிகை ஊடகச் செயலர் தகவல்



வாஷிங்டன், பிப்.6-


இந்தியப் பொருட்களுக்கான இறக்குமதி வரி 18 சதவீதமாக குறைக்கப்படும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அமெரிக்க வெள்ளை மாளிகை ஊடக செயலர் கரோலின் லீவிட் செய்தியாளர்களிடம் கூறியதாவது: “இந்தியா, அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது. இதை ஒரு மிகப்பெரிய வெற்றியாக அமெரிக்கா பார்க்கிறது. இதைத் தொடர்ந்து ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெயை வாங்குவதில்லை என இந்தியா உறுதி அளித்துள்ளது.

மேலும், அமெரிக்கா, வெனிசுலா நாடுகளிடமிருந்து இனி கச்சா எண்ணெயை இந்தியா வாங்கும். ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்படும் கச்சா எண்ணெயை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல் அமெரிக்க பொருட்களை இறக்குமதி செய்யும் எண்ணிக்கையை அதிகரிக்கவும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது. வெனிசுலாவிடம் இருந்தும் இந்தியா, கச்சா எண்ணெயை வாங்க முடியும். இதனால் அமெரிக்க பொருளாதாரம் மேலும் பலன் அடையும்.

இந்தியாவுடன் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தத்தை அதிபர் ட்ரம்ப் இறுதி செய்துள்ளார். இதற்காக இந்தியப் பிரதமர் மோடியுடன் அவர் நேரடியாகவே பேசி உள்ளார். மேலும், அமெரிக்க எரிசக்தி, போக்குவரத்து மற்றும் விவசாயப் பொருட்களை வாங்குவதற்காக இந்தியா 500 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு செலவிடவுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கருப்பணவெளி சாமியாடிகள் மயில்கள் அகவும் பெருநிலம் 18



சென்னை, பிப்.6-

பவ வருடத்துப் பங்குனியின் திங்கள்கிழமை. அந்தி முடிவுற்று இருள் சூழும் நேரம். கண்ணன்கோயில் தாண்டித் தென்மேற்கே நீளும் மண்சாலையில் நானும் அப்புக்குட்டி அண்ணனும் மிதிவண்டியில் பயணித்துக்கொண்டிருந்தோம். ஆகாயத்தில் மஞ்சள்முகக் ஆள்காட்டிகள் அபயக்குரலிட்டுப் பறந்தன. ஓரிடத்தில் மணற்கிளுவை மரத்தினடியில் காரைத்திண்டின் மீது உருவமற்று கற்சாமிகள் வீற்றிருந்தன. அப்புக்குட்டி அண்ணன் மிதிவண்டியை நிறுத்தி இறங்கி வணங்கினார்.

“காரமடை சாமிய வணங்கிய சித்தர் ஒருத்தர் இங்க ஜீவசமாதி ஆகியிருக்கிறாருஞ் ரொம்ப சத்திய வாக்கான இடம். நம்ம ஆறுச்சாமி அண்ணன் தினமும் இங்கு பூசை செய்வாரு.” நானும் மிதிவண்டியில் இருந்து இறங்கி வணங்கினேன். அப்போது மணற்கிளுவை கிளைகளுக்குள் மரப்பல்லி சகுனித்தது.

அப்புக்குட்டி அண்ணன் சொன்னார்: “உனக்கு நல்லது நடக்கும். இங்கு அவ்வளவு சுலபத்துல சகுனம் கெடைக்காது.”

மீண்டும் நாங்கள் மிதிவண்டிப் பயணத்தைத் தொடர்ந்தோம். அத்துவான மானாவாரி மேய்ச்சல் காடுகள் கடந்தன. அப்புக்குட்டி அண்ணன் என் பக்கத்துத் தோட்டத்துக்காரர். முப்பது வயது இளைஞர். வெகுநாளாக என்னை இந்தக் கோயிலுக்கு வரும்படி வற்புறுத்திக்கொண்டிருந்தார். இன்றுதான் சந்தர்ப்பம் வாய்த்தது.

காதப்புள்ளப்பட்டிக்கு முன்பான தோட்டம் ஒன்றினுள் நுழைந்து, அப்புக்குட்டி அண்ணன் மிதிவண்டியை நிறுத்தினார். காய்ந்த கொழுக்கற்றைப் புற்கள் காற்றாடும் மேய்ச்சல் காட்டின் மையத்துக்குக் கூட்டிப்போனார். மணற்கிளுவை மரத்தினடியில் சிறிய சீமையோட்டுக் கூரையின் கீழ் சேமலையாண்டவர் கோயில் இருந்தது. கனவில் சிவன்மலை ஆண்டவரின் உத்தரவு கிடைத்து உருவாக்கிய ஸ்தலம். மூலஸ்தானத்தில் முருகரின் ரூபமற்ற கற்சிலை.

இருள் அடர்ந்தபோது அந்தக் கோயிலை நிர்வகிக்கும் திப்பணாங்காட்டு அய்யன் வந்தார். குள்ளமான தோற்றம். எழுபது வயது முதுமை. சிரித்த முகத்தோடு என்னைக் குறித்து அப்புக்குட்டி அண்ணனிடம் விசாரித்தார். “தம்பி, எங்கக் கிழபுறத்தோட்டத்துப் பையனுங்க. மெட்ராஸுல வேலை செஞ்சுட்டு விட்டுட்டு வந்திருச்சு. மறுக்காவும் மெட்ராஸுக்குப் போகணும். சாமிகிட்ட நல்ல உத்தரவு வாங்கறதுக்குக் கூட்டிக்கிட்டு வந்தேனுங்க.” “வடக்கால கருப்பராயனக் கும்பிட்டுட்டு வாங்க. கணக்கு வருதான்னு பார்க்கறேன்.”

# குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மக்களவையில் நிறைவேற்றம்



புதுடெல்லி, பிப்.6.-

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

மக்களவை வழக்கம்போல் இன்று காலை 11 மணிக்கு கூடியது. அவை கூடியது முதல், ஓய்வுபெற்ற ராணுவத் தளபதியின் ‘நினைவுக் குறிப்புகளில்’ இருந்து ராகுல் காந்தி மேற்கோள் காட்டி பேச அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தினர். இதற்கு சபாநாயகர் ஓம் பிர்லா அனுமதி மறுத்தார்.

மேலும், அவை கூடிய இரண்டு நிமிடங்களில் அவையை பகல் 12 மணிக்கு ஒத்திவைத்தார். 12 மணிக்கு அவை கூடியபோது மீண்டும் எதிர்க்கட்சி எம்பிக்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சி எம்பிக்களின் கோரிக்கையை ஏற்க சபாநாயகர் மறுத்துவிட்டார்.

எதிர்க்கட்சிகளின் அமளிக்கு இடையே, பிரதமரின் உரை இல்லாமல், குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை மக்களவை நிறைவேற்றியது. குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான எதிர்க்கட்சிகளின் திருத்தங்களை சபாநாயகர் ஓம் பிர்லா வாக்கெடுப்புக்குவிட்டார். அவை நிராகரிக்கப்பட்டன.

பின்னர், ஜனவரி 28ம் தேதி நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை சபாநாயகர் வாசித்தார். எதிர்க்கட்சி எம்பிக்களின் எதிர்ப்பு முழக்கங்களுக்கு மத்தியில் அந்த தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, மக்களவை பிற்பகல் 2 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து, நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், ‘‘நாடாளுமன்ற ஜனநாயகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பேசவும் விவாதத்தை தொடங்கவும் உரிமை உண்டு. அது இந்த அவையில் முற்றிலும் மறுக்கப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் பேச அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் ஒரே கோரிக்கை’’ என கூறினார்.

இது தொடர்பாகப் பேசிய பாஜக தேசிய பொதுச் செயலாளர் அருண் சிங், ‘‘காங்கிரஸ் கட்சியின் அடிப்படை அணுகுமுறை எதிர்மறை எண்ணங்களால் நிரம்பியுள்ளது. அவர்கள் மீண்டும் மீண்டும் நாடாளுமன்ற அமர்வுகளை சீர்குலைக்கிறார்கள். இல்லாத விஷயங்களில் இருந்து பிரச்சினைகளை உருவாக்க முயல்கிறார்கள். இது நாட்டு மக்களுக்குத் தெரியும். அதனால்தான், அவர்கள் காங்கிரஸ் கட்சியை மீண்டும் மீண்டும் நிராகரிக்கிறார்கள். ஆனாலும் காங்கிரஸ் கட்சி அதை இன்னும் உணரவில்லை’’ என விமர்சித்தார்.

# ட்ரம்ப்பை கொலை செய்ய முயற்சித்த நபருக்கு ஆயுள் தண்டனை!

வாஷிங்டன், பிப்.6-

2024 அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு டொனால்டு ட்ரம்பைக் கொல்ல சதி செய்த குற்றச்சாட்டில் ரியான் ரூத்துக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



புளோரிடாவில் உள்ள ஒரு கோல்ஃப் மைதானத்தில் 2024ஆம் ஆண்டு டொனால்டு ட்ரம்ப் கோல்ஃப் விளையாடிக் கொண்டிருந்தபோது, ஒரு துப்பாக்கியுடன் ரியான் ரூத் (59) புதர்களில் கிட்டத்தட்ட 10 மணி நேரம் மறைந்திருந்ததாகவும், பின்னர் உளவுத்துறையினரால் அவர் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. இதனை தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.

விசாரணையின் போது தனது தரப்பிலான வழக்கறிஞராக தானே செயல்பட்ட ரௌத், ட்ரம்ப்பால் நியமிக்கப்பட்ட நீதிபதியிடம் 27 ஆண்டுகள் சிறைத் தண்டனை கோரினார். ஆனால், ரூத்தின் குற்றங்கள் "அமெரிக்க ஜனநாயகத்தை சீர்குலைப்பதை" நோக்கமாகக் கொண்டிருந்ததாகக் கூறிய அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள், ஆயுள் தண்டனையை பரிந்துரைத்திருந்தனர்.

வழக்கை விசாரித்த மாவட்ட நீதிமன்ற நீதிபதி அய்லி கேனன், "ஒரு மனித உயிரைப் பறிப்பதற்காக நீங்கள் திட்டமிட்டு, ஒரு சதியில் ஈடுபட்டது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது" என்று தனது தீர்ப்பில் கூறினார்.

இந்தச் சம்பவம் செப்டம்பர் 15, 2024 அன்று புளோரிடாவின் வெஸ்ட் பாம் பீச்சில் உள்ள ட்ரம்ப் சர்வதேச கோல்ஃப் கிளப்பில் நடந்தது. இதற்கு சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு, பென்சில்வேனியாவின் பட்லரில் நடந்த ஒரு பேரணியில் ட்ரம்பின் மீது நடத்தப்பட்ட கொலை முயற்சி சம்பவத்தில், மர்ம நபரின் துப்பாக்கி குண்டு ட்ரம்ப்பின் காதை உரசிச் சென்றது.

சம்பவம் நடந்த நாளுக்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு ரூத் புளோரிடாவுக்கு வந்து, ஒரு டிரக் நிறுத்தத்தில் தங்கியிருந்து, ட்ரம்பின் நடமாட்டம் மற்றும் பயண அட்டவணை குறித்த தகவல்களை சேகரிக்க முயன்றதாக அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித்தனர். ட்ரம்ப்பைக் கொல்லும் நோக்கம் தனக்கு இல்லை என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் ரூத் தெரிவித்தார். மேலும், சிறையில் இருக்கும்போது உளவியல் சிகிச்சைக்கு உட்படுத்திக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில், ட்ரம்பைக் கொல்ல சதி செய்த குற்றச்சாட்டில் ரியான் ரூத்துக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## நீலகிரி, சேலம் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் பனிமூட்டம் நிலவ வாய்ப்பு

சென்னை, பிப்.6-

தமிழகத்தில் நீலகிரி, சேலம் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் நாளை (பிப்.6) பனிமூட்டம் நிலவ வாய்ப்புள்ளது.



இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகம், புதுச்சேரியில் நாளை முதல் பிப்.11ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும்.

நாளை முதல் 9ம் தேதி வரை நீலகிரி, சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிபேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 31 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை 21 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக புதுக்கோட்டை மாவட்டம் மிசிசல், மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது.

பதிவான குறைந்தபட்ச (குளிர்) வெப்பநிலை அளவுகளின்படி அதிகபட்சமாக சமவெளிப்பகுதியான திருத்தணியில் 16.5 டிகிரி செல்சியஸ், மலைப்பகுதியான கொடைக்கானலில் 7.7 டிகிரி செல்சியஸ் குளிர் பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உ.பி.யில் கொரியா ஆன்லைன் விளையாட்டுக்கு அடிமையான 3 சகோதரிகள் 9வது மாடியிலில் இருந்து குதித்து தற்கொலை

காஜியாபாத், பிப்.6-

உத்தர பிரதேச மாநிலம் காசியாபாத்தைச் சேர்ந்த வெளிநாட்டு கரன்சி வியாபாரி பாரத் சிட்டி சொசைட்டி என்ற அடுக்குமாடி குடியிருப்பின் 9வது தளத்தில் வசித்து வருகிறார். இவருக்கு 16, 14, 12 ஆகிய வயதில் 3 மகள்கள் இருந்தனர்.




இவர்கள் கரோனா காலத்தில் செல்போன் மூலம் ஆன்லைன் வகுப்புகளில் பாடம் கற்ற போது ஆன்லைன் விளையாட்டை கற்றுக் கொண்டனர். நாளடைவில் இவர்கள் கொரியன் ஆன்லைன் விளையாட்டுக்கு அடிமையாகியுள்ளனர்.

இந்நிலையில் இவர்கள் நேற்று முன்தினம் காலை தற்கொலை செய்ய முடிவு செய்தனர். "சாரி அப்பா'. கொரியாதான் எங்கள் வாழ்க்கை. அதை எங்களால் கைவிட முடியாது" என்ற குறிப்பு எழுதி விட்டு இவர்கள் பூஜை அறைக்கு சென்று கதவை மூடியுள்ளனர். ஒரு நாற்காலி மீது ஏறி ஜன்னல் வழியாக ஒருவர்பின் ஒருவராகக் குதித்து தற்கொலை செய்துள்ளனர்.

இவர்கள் கீழே விழுந்த சத்தத்தை கேட்டு அடுக்குமாடி குடியிருப்பில் வசித்தவர்கள் வெளியே வந்து பார்த்துள்ளனர். ரத்த வெள்ளத்தில் கிடந்த சகோதரிகள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

கொரியன் லவ் கேம்: விசாரணையில் தற்கொலை செய்து கொண்ட 3 சகோதரிகளும் ஆன்லைன் விளையாட்டு செயலி மூலம் 'கொரியன் லவ் கேம்' என்ற ஆன்லைன் விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர். இந்த விளையாட்டை தொடங்கும்போது சமூக ஊடகம் மூலமாக தொடர்பு கொள்ளும் நபர், விளையாடுபவர்களுடன் இனிமையாக பேச்சு கொடுப்பார். போட்டோக்களை பகிர்ந்து கொள்வார். பின்னர் கொரியா பொழுதுபோக்கு கலாச்சாரம், கொரியா நாடகங்கள் ஆகியவை உட்பட சிறிய இலக்குகளுடன் கூடிய போட்டியை நடத்துவார்.

இது நாளடைவில் கடினமான இலக்காக மாறும். இதை முடிக்கவில்லை என்றால், சவால்கள் தொடர்ந்து 50 நாட்களுக்கு இருக்கும் என மிரட்டல் விடுக்கப்படும். இதற்கு பயந்து சிறுவர்கள் அந்த விளையாட்டை தொடர்வர். இந்த விளையாட்டில் மொத்தம் 50 இலக்குகள் இருக்கும், இறுதி இலக்கு தற்கொலை சவாலில் முடியும் என கூறப்படுகிறது.

இந்த விளையாட்டில் மூழ்கி 3 சகோதரிகளும் தற்கொலை செய்திருப்பார்கள் என நம்பப்படுகிறது. இவர்களை ஆன்லைன் விளையாட்டில் ஈடுபட வேண்டாம் என பெற்றோர் தடுக்கும் போதெல்லாம் "கொரியா தான் எங்கள் வாழ்க்கை, கொரியாதான் எங்களுக்கு பிடிக்கும். நீங்கள் என்ன சொன்னாலும், கொரியா ஆன்லைன் விளையாட்டை கைவிட முடியாது" என சிறுமிகள் கூறியுள்ளனர்.

## "ரயில்வே திட்டங்கள் தாமதமாக திமுக அரசே காரணம்": கனிமொழிக்கு அண்ணாமலை பதில்

சென்னை, பிப்.6-

'தமிழகத்தில் ரயில்வே திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் தாமதத்துக்கு திமுக அரசே காரணம்' என கனிமொழி எம்.பி.க்கு பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை பதிலளித்துள்ளார்.



இது குறித்து அவர் இன்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "தமிழகத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டங்கள் குறித்த உண்மை நிலையை அறியாமல் திமுக எம்.பி. கனிமொழி பேசுகிறார். தமிழகத்தில் தற்போது ரூ.35,701 கோடி மதிப்பிலான ரயில்வே திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இருப்பினும், இந்தத் திட்டங்களை செயல்படுத்த தேவையான நிலங்களை விரைவாகக் கையகப்படுத்துவதில் தமிழக அரசு தவறியதால், திட்டங்கள் தாமதத்தைச் சந்தித்து வருகின்றன.

மொத்தம் 4,326 ஹெக்டேர் நிலம் தேவைப்படும் நிலையில், 2025 டிசம்பர் நிலவரப்படி வெறும் 24 சதவீத நிலமே தமிழக அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. சில ரயில்வே திட்டங்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலம் கையகப்படுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது. இதுபோன்ற நிலை தேசிய நெடுஞ்சாலை திட்டங்களிலும் காணப்படுகிறது.

தமிழகத்துக்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை செயல்படுத்துவதில், திமுக அரசு திட்டமிட்டு தடைகளை ஏற்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் அளவுக்கு மீறிய தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனவே, எந்த ஆதாரமும் இன்றி குற்றச்சாட்டுகளை முன்வைப்பதைவிட, ஏற்கெனவே அனுமதி பெற்றுள்ள திட்டங்களை நிறைவேற்ற நிலம் கையகப்படுத்துவதில் ஏன் தாமதம் ஏற்படுகிறது என்பதைக் குறித்து கனிமொழி தனது சகோதரரிடம் கேட்க வேண்டும்" என்று அண்ணாமலை கூறியுள்ளார்.

முன்னதாக, 'இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பு அளிக்கும் மாநிலமாக தமிழகம் விளங்கினாலும், ரயில்வே நிதி ஒதுக்கீட்டில் புறக்கணிக்கப்படுகிறது. இது, மாநிலத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு பாதகமாக அமையும்' என கனிமொழி எம்.பி குற்றம்சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## நீட் முதுநிலை தேர்வு கட்ஆஃப் மதிப்பெண் குறைப்பு

### வாரியம் பதில் அளிக்க உத்தரவு

புதுடெல்லி, பிப்.6-

நீட் முதுநிலை தேர்வு கட் ஆஃப் மதிப்பெண் குறைப்பை எதிர்த்து தொடரப்பட்ட பொதுநல மனுவுக்கு, தேசிய தேர்வுகள் வாரியம் பதில் அளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



நீட் முதுநிலை தேர்வு கட் ஆப் மதிப்பெண் குறைக்கப்பட்டதை எதிர்த்து, சமூக ஆர்வலர் ஹரிசரண் தேவ்கான் உள்ளிட்ட நால்வர் சார்பில் வழக்கறிஞர் நீமா பொதுநல மனு தாக்கல் செய்தார்.

அதில், "தேசிய தேர்வுகள் வாரியம் கடந்த மாதம் 13ம் தேதி வெளியிட்ட அறிவிக்கையில், நீட் முதுநிலை தேர்வு கட் ஆஃப் மதிப்பெண்ணை பூஜ்ஜியத்துக்கும் கீழே குறைத்துள்ளது. இதனால் மருத்துவ கல்வித் தரம் பாதிக்கப்படும். எனவே இந்த அறிவிக்கையை ரத்து செய்ய வேண்டும்" என கோரப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா, ஆலோக் ஆராதே ஆகியோர் அடங்கிய அமர்வு, பொதுநல மனுவுக்கு பதில் அளிக்குமாறு தேசிய தேர்வுகள் வாரியத்துக்கு உத்தரவிட்டுள்ளது.



## மணிப்பூர் முதல்வராக யும்நம் கேம்சந்த் பதவியேற்பு

### குகி, நாகா எம்.எல்.ஏக்களுக்கு துணை முதல்வர் பதவி

மணிப்பூர், பிப்.6-

கூட்டணி அரசில் சமூக சமநிலையைப் பேணும் விதமாக, குகி சமூகத்தைச் சேர்ந்த பா.ஜ.க எம்.எல்.ஏ நெம்சா கிப்ஜென் மற்றும் நாகா மக்கள் முன்னணியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. எல். டிக்ஹோ ஆகியோர் துணை முதல்வர்களாகப் பதவியேற்றனர்.

இதில் நெம்சா கிப்ஜென், டெல்லியில் உள்ள மணிப்பூர் பவனில் இருந்து காணொலி வாயிலாகப் பதவியேற்றுக் கொண்டார்.மேலும், பா.ஜ.கவின் கோவிந்தாஸ் கொந்தவுஜம், என்.பி.பி கட்சியின் கே. லோகன் சிங் ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

இம்பால்: மணிப்பூர் மாநிலத்தின் புதிய முதல்வராக பாஜகவைச் சேர்ந்த மூத்த தலைவர் யும்நம் கேம்சந்த் சிங் நேற்று பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு ஆளுநர் அஜய் குமார் பல்லா பதவிப்பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

மணிப்பூரில் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் அமலில் இருந்த குடியரசுத் தலைவர் ஆட்சி வாபஸ் பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே தலைநகர் இம்பாலில் உள்ள மக்கள் பவனில் நேற்று மாலை இந்த பதவியேற்பு விழா நடைபெற்றது.


முன்னதாக, டெல்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சட்டப்பேரவைக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், கேம்சந்த் சிங் ஒருமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இக்கூட்டத்தில் பா.ஜ.கவின் 37 எம்எல்ஏக்களில் 35 பேர் பங்கேற்றனர். கட்சியின் மத்தியப் பார்வையாளர் தருண் சுக், வடகிழக்கு மாநிலப் பொறுப்பாளர் சம்பித் பத்ரா உள்ளிட்டோரும் இதில் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள என்.பி.பி (6 எம்எல்ஏக்கள்), என்.பி.எஃப் (5 எம்எல்ஏக்கள்) மற்றும் மூன்று சுயேச்சை உறுப்பினர்களுடனும் ஆலோசனைகள் நடத்தப்பட்டு ஆட்சி அமைக்க முடிவு செய்யப்பட்டது.

## கோத்தகிரியில் சிறுத்தை தாக்கி ஐ.டி. ஊழியர் படுகாயம்

கோத்தகிரி, பிப்.6-

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் செயல்படும் தனியார் பள்ளியில் நேபாளத்தை சேர்ந்த ஜனக் என்பவர் இரவு நேரக் காவலாளியாக பணிபுரிந்து வருகிறார்.



இவரது மகன் பகதூர் (25) பெங்களூருவில் உள்ள தகவல் தொழில்நுட்ப (ஐ.டி.) நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இந்நிலையில், விடுமுறைக்காக கோத்தகிரிக்கு வந்த பகதூர் நேற்று முன்தினம் இரவு வளர்ப்பு நாயுடன் வெளியே சென்றார். சில மணி நேரங்கள் கழித்து நாய் மட்டும் வீடு திரும்பியது. இதனால் அதிர்ச்சியடைந்த உறவினர்கள் பகதூரைத் தேடினர். பள்ளி வளாகத்தில் படுகாயங்களுடன் கிடந்த பகதூரை மீட்டு, கோத்தகிரி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். தகவலறிந்து வந்த வனத் துறையினர் விசாரணை மேற்கொண்டதில், பள்ளி வளாகத்தில் உலா வந்த சிறுத்தை, பகதூரின் வளர்ப்பு நாயை வேட்டையாட முயன்றதும், அதைக் காப்பாற்ற முயன்ற பகதூரைத் தாக்கியதும் தெரியவந்தது. முதலுதவி சிகிச்சைக்குப் பின்னர் ஊட்டி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக பகதூர் சேர்க்கப்பட்டுள்ளார்.

## இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்த கூட்டறிக்கை 5 நாட்களில் வெளியாகலாம்: பியூஷ் கோயல்

புதுடெல்லி, பிப்.6-

இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் அடுத்த 45 நாட்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.



இந்தியாவுக்கும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலுக்கும் (நிசிசி) இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான விதிமுறைகள் இறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக இரு தரப்பு பேச்சுவார்த்தைக் குழு தலைவர்கள் இன்று கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பியூஷ் கோயல் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், "இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் குறித்த கூட்டறிக்கை தயாராக உள்ளது. அது இன்னும் 45 நாட்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டப்பூர்வமான இரு தரப்பு வர்த்தக ஒப்பந்தம் மார்ச் மாத மத்தியில் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டறிக்கை வெளியான பிறகு, இந்திய பொருட்களுக்கான இறக்குமதி வரியை 18% ஆக குறைப்பதற்கான அரசாணையை அமெரிக்க அரசு பிறப்பிக்கும்" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதற்கும், அமெரிக்காவிடம் இருந்து 500 பில்லியன் டாலர் அளவுக்கு பொருட்களை கொள்முதல் செய்யவும் பிரதமர் நரேந்திர மோடி உறுதி அளித்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது.

வெள்ளை மாளிகையில் செவ்வாய் கிழமை (பிப். 3) செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க பத்திரிகைச் செயலாளர் கரோலின் லெவிட், "அதிபர் டொனால்டு ட்ரம்ப், இந்திய பிரதமர் மோடியுடன் சிறப்பான ஒரு தொலைபேசி உரையாடலை நடத்தினார். அதன்மூலம், இந்தியாவுடன் சிறந்த வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளார்.

பிரதமர் மோடியுடன் அவர் நேடியாகப் பேசினார். அவர்கள் ஒருவருக்கு ஒருவர் நல்ல உறவை கொண்டிருக்கிறார்கள். அதிபர் ட்ரம்ப், பிரதமர் மோடியுடனான உறவை மிகவும் விரும்புகிறார், பிரதமர் மோடி மீதும் இந்தியா மீதும் மிகுந்த மரியாதை வைத்துள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல், அமெரிக்காவிடம் இருந்தும், வெனிசுலாவிடமிருந்தும்கூட எண்ணெய் வாங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. இது அமெரிக்காவுக்கும் அமெரிக்க மக்களுக்கும் நேரடி பலன்களைத் தரும். வெனிசுலாவின் வர்த்தகத்தையும், அதன் எண்ணெய் விற்பனையையும் அதிபர் ட்ரம்பும் அவரது தேசிய பாதுகாப்புக் குழுவும் நேரடியாக தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.

எரிசக்தி, போக்குவரத்து, விவசாயப் பொருட்கள் ஆகியவற்றை 500 பில்லியன் டாலர் அளவுக்கு அமெரிக்காவிடம் இருந்து கொள்முதல் செய்ய மோடி உறுதி அளித்துள்ளார்.

இந்தியா மீதான அமெரிக்க வரி 18% ஆக இருக்கும். அதேநேரத்தில், அமெரிக்க ஏற்றுமதிகளுக்கு இந்தியாவில் பூஜ்ஜிய வரி விதிக்கப்படும். எனவே இது ஒரு சிறந்த ஒப்பந்தம். அமெரிக்க தொழிலாளர்கள், வணிகங்கள், நுகர்வோர் அனைவருக்கும் இது ஒரு பெரிய வெற்றி" என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



■ தென்காசி மாவட்டம் ஆய்க்குடி ஜெ.பி. பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் கலந்துகொண்டு, 282 உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் பயன்பெற்ற 2391 பயனாளிகளுக்கு ரூ.33.59 இலட்சம் மதிப்பீட்டில் உதவித்தொகைக்கான ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தென்காசி சார் ஆட்சியர் வைஷ்ணவிபால் ஆகியோர் உள்ளனர்.



■ தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்று வரும் 4 வது பொதிகை புத்தகத்திருவழாவில் மாவட்ட படைப்பாளுமை டி.எஸ். சொக்கலிங்கம் அரங்கில், 6 வது நாள் நிகழ்வாக பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.



## அலங்காநல்லூர் பகுதி அரசு பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி

அலங்காநல்லூர்., பிப்.6-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள முடுவார்பட்டி, வெள்ளையம்பட்டி, பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய பகுதியில் அமைந்துள்ள அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு, தமிழக அரசின் விலை இல்லா மிதிவண்டி வழங்கு விழா நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், கலந்து கொண்டுபள்ளி மாணவ மாணவிகளுக்கு மிதி வண்டிகளை வழங்கினார். அதனை தொடர்ந்து அவர் மாணவர் மத்தியில் பேசியது தமிழக அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மடிக்கணினி திட்டம், காலை உணவு திட்டம், விலையில்லா சைக்கிள், அனைத்து மாணவர்களுக்கும் இலவச புத்தகங்கள் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து வழங்கி வருகிறது என்று தெரிவித்தார்.

இதில் தலைமை ஆசிரியர்கள் பரமசிவம், உமாமகேஸ்வரி காமாட்சி, திமுக ஒன்றிய செயலாளர்கள் தனராஜ், பரந்தாமன், முத்தையன், அருண், முன்னாள் ஒன்றிய துணை சேர்மன் சங்கீதா மணிமாறன், நகர செயலாளர்கள் ரகுபதி, மனோகரவேல் பாண்டியன், அலங்காநல்லூர் பேரூராட்சி தலைவர் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், துணைத் தலைவர் சுவாமிநாதன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, சேதுசீனிவாசன்,

முன்னாள் பேரூராட்சி தலைவர் அழகு உமா பெரியசாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு,

மாணவரணி அமைப்பாளர் யோகேஷ், சோழவந்தான் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சதீஷ், இளைஞரணி பாலகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## பாதாள செம்பு முருகன் திருக்கோவிலில் தமிழ்நாடு கிரிக்கெட் அணியினர் சாமி தரிசனம்

சின்னாளபட்டி, பிப்.6.-

திண்டுக்கல் மாவட்ம், நத்தம் என்.பி,ஆர். கல்லூரியில் 23 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டிகளை இந்திய கிரிக்கெட் வாரியம் சி.கே. நாயுடு கோப்பைக்கான தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் நடத்தும் போட்டிகள் வரும் 6ம் தேதி முதல் 9ம் தேதி வரை நடைபெறுகிறது. என்.பி.ஆர் கல்லூரியில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளில் தமிழ்நாடு அணி திரிபுரா மாநில அணியுடன் மோதுகிறது. தமிழ்நாடு அணியைச் சேர்ந்த கேப்டன் பூபதி வைஷ்ணவகுமார் தலைமையிலான கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் இராமலிங்கம்பட்டியில் அமைந்துள்ள பாதாள செம்பு முருகன் கோவிலுக்கு வந்து சங்கிலி கருப்பு சுவாமியை தரிசனம் செய்த பின்பு பாதாள செம்பு முருகனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்தனர். கோவில் நிர்வாகம் சார்பாக போட்டிகளில் வெற்றிபெற பரிவட்டம் கட்டி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு அணி தலைமை பயிற்சியாளர் குரு கேதர்நாத், திண்டுக்கல் மாவட்ட கிரிக்கெட் சங்க உதவி தலைவர் வெங்கட்ராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் சமீபத்தில் நடைபெற்ற 23 வயதுக்குட்பட்டோருக்கு மாநிலங்களுக்கு இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் உத்திரபிரதேச அணியை தமிழ்நாடு அணி வென்று ஓ.எல்.சி.கே. நாயுடு கோப்பையை பெற்றது குறிப்பிடத்தக்கது.

# ஜாக்டோ ஜியோ முதல்வருக்கு பாராட்டு விழாவில் குடும்பத்தோடு கலந்து கொள்ள தீர்மானம்



புதுக்கோட்டை, பிப்.06-

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் செயற்குழு பொதுக்குழு கூட்டம் அரசு அலுவலர் கட்டிடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்டத் தலைவர் ராஜாங்கம் தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பு செயலாளர் முத்துக்குமார் அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில சட்ட ஆலோசகர் ராஜா, மாநில செய்தி தொடர்பாளர் ரகமதுல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இச்செயற்குழு, பொதுக்குழு கூட்டத்தில் அனைத்து அரசு ஊழியர்கள் ஆசிரியர் பெருமக்கள் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்திய முதல்வருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிப்ரவரி 8 ஜாக்டோ ஜியோ சார்பில் நடைபெறும் நன்றி அறிவிப்பு மாநாட்டில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் அனைத்து மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் குடும்பத்தோடு கலந்து கொள்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2004 முதல் 2006 தொகுப்பூதிய காலத்தை பணிக் கலமாக அறிவிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உயர்கல்விக்கு ஊக்க ஊதியத்தை பழைய முறைப்படி வழங்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் பழனிச்சாமி, ரவீந்திரன், வீரமணி, முருகராஜ், வெள்ளைச்சாமி, உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிறைவாக கல்வி மாவட்ட செயலாளர் முனைவர் ஆ. கலையரசன் நன்றி கூறினார்.

## திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தொகுதி –I தேர்வுக்கான இலவசப் பயிற்சி வகுப்பு தொடக்கம் மாவட்ட ஆட்சியர் தகவல்

திருப்பூர், பிப்.6-

திருப்பூர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் 2026 ஆம் ஆண்டிற்கான ஆண்டு திட்ட நிரல் 03.12.2025 அன்று வெளியிடப்பட்டது. இதில் தொகுதி மி (துணைஆட்சியர், துணை காவல் கண்காணிப்பாளர், உதவி ஆணையர், மாவட்ட பதிவாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு) தேர்வுக்கான அறிவிப்பு 23.06.2026 அன்று வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தேர்வாணையம் தொகுதி –I தேர்வுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 16.02.2026 அன்று காலை 10.30 மணிக்கு அறை எண்.439 இல் தொடங்கப்படவுள்ளது. மேலும், இப்பயிற்சியில் மாதம் இருமுறை மாதிரித் தேர்வுகள் நடத்தப்பட உள்ளன. இத்தேர்வுக்கான இலவசப் பயிற்சியில் கலந்து கொள்ளவிருப்பம் உள்ளவர்கள் தங்கள் பெயரை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரிலோ அல்லது 04212999152இ 9499055944 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு பதிவுசெய்து கொள்ளலாம். இப்பயிற்சியில் சேர்ந்து கொண்டு பயன்பெறலாம். இவ்வாறுமாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



## இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு

ஈரோடு, பிப்.6-

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026ன் ஒரு பகுதியாக வரைவு வாக்காளர் பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட

தேசிய மற்றும் மாநில கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கும் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது.

இதில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள 08 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள தரவுகளில் உள்ள முரண்பாடுகளை சரிசெய்வது தொடர்பாகவும், வாக்குச் சாவடி மறுசீரமைத்தல் தொடர்பாகவும், படிவங்கள் 6,7,8 (சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம்) தொடர்பாகவும் கூட்டம் நடைபெற்றது. மேலும், அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் 2 –ஐ நியமிக்க வேண்டும் எனவும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

## மதுரையில் பெண்களுக்கு தங்கும் வசதியுடன் கூடிய இலவச நர்சிங் பயிற்சி சுபம் அறக்கட்டளை

மதுரை, பிப்.6-

சுபம் அறக்கட்டளை சார்பில் மதுரை புறநகர் மற்றும் அணைத்து கிராமப்புற மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் வசிக்கும் பெண்களுக்கு தங்கும் வசதியுடன் கூடிய இலவச நர்சிங் பயிற்சி நடக்க இருக்கிறது.

வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களுக்கு பயிற்சி வழங்கப் படுகிறது. மாற்றுத் திறனாளி பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படுகிறது.இந்த பயிற்சி 3 மாத காலம் நடக்க உள்ளது.18 முதல் 35 வயது வரை உள்ள அணைத்து பெண்களும் கலந்து கொள்ளலாம்.

பயிற்சியில் பயிற்சி உபகரணங்கள் வழங்கப்படும்.சீருடை, உணவு, தங்கும் இடம்,பாடப் புத்தகங்கள் இன்சூரன்ஸ் அரசு சான்றிதழ் வழங்கப்படும்,பயிற்சி வருகின்ற திங்கள் முதல் துவங்க உள்ளது.நூறு சதவிகித வேலை வாய்ப்பு தலை சிறந்த மருத்துவமனைகளில் பெற்றுத் தரப்படும்.வேலைக்கு செல்லும் பயனாளிகளுக்கு அவரவர் வங்கி கணக்கில் அரசால் வழங்கப்படும் உதவித் தொகை பெற்றுத் தரப்படும்.

கல்வித் தகுதி 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். ஆதார்,போட்டோ மற்றும் குடும்ப அட்டை,கல்வி சான்றிதழ் ஆகியவற்றின் நகலினை கொண்டு வந்து முன் பதிவு செய்து கொள்ளவும்.

இடம்: 1A,அருணாசலம் தெரு,வடக்கு வாசல்,எஸ்.எஸ் காலணி,மதுரை 625016.

தொடர்புக்கு : 9095054177.





## கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில் உசிலம்பட்டி தொகுதி ஜல்லிக்கட்டு போட்டி

அலங்காநல்லூர், பிப்.06-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கீழக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில், உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதி சார்பாக, ஜல்லிக்கட்டு போட்டியினை வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி கலந்து கொண்டு கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் மாவட்டத் துணை ஆட்சியர் உட்கர்ஸ்குமார், சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், வழக்கறிஞர் பாலாஜி, செல்லம்பட்டி ஒன்றிய செயலாளர் சுதாகரன், அலங்காநல்லூர் வட்டார மருத்துவர் வளர்மதி, சமயநல்லூர் காவல் துணை கண்காணிப்பாளர் ஆனந்தராஜ், அலங்காநல்லூர் காவல் ஆய்வாளர் பிரகாஷ், மருத்துவத்துறையினர், வருவாய்த்துறையினர் மற்றும் காவல்துறையினர் கலந்து கொண்டனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000